Bundesamt
für Migration
und Flüchtlinge

# மின்னணு வசிப்பிட அனுமதி

TAMIL



Migration



# பொருளடக்கம்

4 மிக முக்கியமான விஷயங்கள் முதலில்

6 உங்கள் மின்னணு வசிப்பிட அனுமதி

7 உங்கள் ஆன்லைன் அடையாளச் செயல்பாடு
ஆன்லைன் அடையாளத்துக்குத் தேவையானது என்ன
ஆன்லைன் அடையாளம் எளிதானது
உங்கள் தரவின் செயல்மிகு பாதுகாப்பு
ஆன்லைன் அடையாளச் செயல்பாட்டை நீங்கள் எங்கு பயன்படுத்த முடியும்
உங்கள் சிறந்த உரிமை – சுய நிர்ணயத் தரவு வெளிப்பாடு
உடனடிப் பிரித்தெடுப்பு

14 பிற செயல்பாடுகள்

15 உங்கள் PIN கடிதம்

16 பாதுகாப்பு ஆலோசனை

17 ரத்து உதவி

18 இணையத்தில்

19 பதிப்பு விபரம்

# மிக முக்கியமான விஷயங்கள் முதலில்

இமிகிரேஷன் அலுவலகத்தில் இருந்து நீங்கள் ஒரு மின்னணு வசிப்பிட அனுமதியைப் பெற்றுள்ளீர்கள். இது ஜெர்மன் வசிப்பிட அனுமதியாக இருக்கலாம், EU ப்ளூ கார்டு, ICT கார்டு, மொபைல் ICT ஆர்டு, நிரந்தர ஜெர்மன் வசிப்பிட அனுமதி அல்லது நிரந்தர EU வசிப்பிட அனுமதியாக இருக்கலாம்.

ஒரு விதியாக, உங்கள் வசிப்பிட அனுமதி மற்றும் பாஸ்போர்ட் இரண்டையும் சேர்த்து, தினசரி அடிப்படையில் உங்களின் அடையாளத்தை நிரூபிக்க முடியும், உதாரணத்திற்கு உள்ளூர் அதிகாரிகள், வங்கி அல்லது அரசாங்க அதிகாரிகளிடம்.

இணையத்தில் இது மாறுபட்டிருக்கும்: நீங்கள் இணையப் பக்கத்திற்கு வருகை தரும்போது, வழங்குநரால் உங்களைப் பார்க்க முடியாது. ஒரு விதியாக நீங்கள் உங்கள் அடையாளத்தை நிரூபிக்க முடியும். அதற்கு இமிகிரேஷன் அலுவலகத்தால் உங்கள் மின்னணு வசிப்பிட அனுமதியின் ஆன்லைன் அடையாளச் செயல்பாடு செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

இந்த அட்டையில் உள்ள மின்னணு நினைவக சாதனத்தின் (சிப்) மூலம் இந்த மின்னணு அடையாளச் செயல்முறையை மேற்கொள்ள முடியும். இதில், உங்கள் தனிப்பட்ட தரவு (பெயர், பிறந்த தேதி, குடியுரிமை, முகவரி), பயோமெட்ரிக் அம்சங்கள் (புகைப்படம் மற்றும் விரல்ரேகைகள்) மற்றும் துணை விதிமுறைகள் (நிபந்தனைகள்) சேமிக்கப்பட்டிருக்கும். இதனைக் கொண்டு, ஆன்லைனில் வழங்கப்படும் அரசாங்க மற்றும் வர்த்தகச் சேவைகளை இணையத்தின் மூலம் எளிதாகவும் விரைவாகவும் உங்களால் பெற முடியும்.

இதனைச் செய்யும்போது, திருட்டு மற்றும் தவறான பயன்பாட்டில் இருந்து உங்கள் தனிப்பட்ட தரவு எப்போதுமே பாதுகாக்கப்படும். இணையத்தில் அடையாளங்கள் அடிக்கடி திருடப்படுகிறது என்பதால் இது முக்கியமாகிறது: உங்கள் அடையாளத் தரவை வேறு ஒருவர் திருடுதல், உதாரணத்திற்கு, உங்கள் பயனர் பெயர், கடவுச்சொல், உங்கள் அடையாளத்தின் பயன்பாடுகள் மற்றும் உங்கள் பெயரிலுள்ள செயல்பாடுகள். உங்கள் மின்னணு வசிப்பிட அனுமதியின் ஆன்லைன் அடையாளச் செயல்பாடு, இதிலிருந்து உங்களைப் பாதுகாத்திடும். ஆன்லைன் அடையாளச் செயல்பாடுகளின் பயன்பாடு தன்னார்வத்திலானது.

இந்தச் சிற்றேட்டில், ஜெர்மனியில் தினசரி வாழ்க்கையில் நீங்கள் உங்கள் மின்னணு வசிப்பிட அனுமதியை எதற்குப் பயன்படுத்தலாம், டிஜிட்டல் உலகத்தில் அதனை எவ்வாறு பயன்படுத்தலாம் மற்றும் எந்தப் பாதுகாப்பு வழிமுறைகளைக் கொண்டு உங்கள் தனிப்பட்ட தரவு பாதுகாக்கப்படுகிறது என்பதை நீங்கள் அறிந்துகொள்வீர்கள்.

மேலும், உங்கள் மின்னணு வசிப்பிட அனுமதியில் பயோமெட்ரிக் தரவு எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது, உங்கள் மின்னணு வசிப்பிட அனுமதியுடன் உருவாக்கத்துக்குப் பின்பு PIN கடிதம் எவ்வளவு முக்கியமானது மற்றும் நீங்கள் பின்பற்ற வேண்டிய பாதுகாப்பு ஆலோசனை என்ன போன்றவற்றையும் நீங்கள் அறிய முடியும்.





# உங்கள் மின்னணு வசிப்பிட அனுமதி

## ஒரு பார்வை




1. புகைப்படம்
2. மின்னணு நினைவக சாதனத்தின் (சிப்) அடையாளக்குறி
3. துணைப்பெயர், முதல் பெயர்
4. வரிசை எண்
5. குடியுரிமை
6. பிறந்த நாள்
7. செல்லுபடிக்காலத்தின் கடைசித் தேதி
8. அட்டை அணுகல் எண் (ஊயுடீ)




1. பிறந்த இடம்
2. முகவரி
3. வழங்கும் அதிகாரி
4. லோகோ: ஆன்லைன் அடையாளச் செயல்பாடு
5. இயந்திரத்தால் வாசிக்கக்கூடிய பகுதி (கூடுதல் தகவல் எதுவும் இல்லை)

இலத்திரனியல் வதிவிட உரிமை அட்டையின் முன்பக்கத்தில் உங்கள் குடும்பப்பெயர் மற்றும் முதற்பெயர்(–கள்) குறிப்பிடப்பட்டிருப்பதுடன் பால், உங்கள் பிரஜாவுரிமை மற்றும் உங்களது பிறந்த திகதி போன்ற விபரங்கள் அடங்கியிருக்கும்.

அத்துடன் முன்பக்கத்தில் வதிவிட உரிமையின் இரகம், இந்த அட்டை செல்லுபடியாகும் காலவரையறைத் திகதி மற்றும் சிலவேளைக–ளில் பக்க நிபந்தனைகளும் குறிப்பிடப்பட்டிருக்கும். இந்த அட்டை செல்லுபடியாகும் காலம், உங்களுக்கான வதிவிட உரிமை வரையறு–க்கப்பட்டுள்ள காலத்திலேயே தங்கியிருக்கும். நீங்கள் காலவரை–யறையற்ற வதிவிட உரிமையை வைத்திருந்தால், இந்த அட்டை ஆகக் கூடியது பத்து வருடங்களுக்குச் செல்லுபடியாகும் என்பதுடன் அதன்பின் புதிதாக்கப்பட வேண்டும். இதன்போது இலத்திரனியல் வதிவிட உரிமை அட்டை, எவ்வாறு அட்டையின் முன்பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதோ அதற்குச் சொந்தமான கடவுச்சீட்டு அல்லது அதற்குப் பதிலான அட்டையில் குறிப்பிடப்பட்டிருக்கும் காலவரை–யறை மட்டுமே நிச்சயமாகச் செல்லுபடியாகும். ஆகவே நீங்கள் உரிய காலத்துடன், செல்லுபடியாகும் காலவரையறை முடிவதற்கு முன்பாகவே ஒரு புதிய கடவுச்சீட்டுக்கு அல்லது அதற்குப் பதிலான அட்டைக்காக விண்ணப்பியுங்கள்.

முன்பக்க வலது மேற்பக்கத்தில் இலத்திரனியல் வதிவிட உரிமை அட்டையின் தொடர் இலக்கம் இருக்கும், இது சிறிய எழுத்தில் இடது மேற்பக்கத்தில் மீளவும் குறிப்பிடப்பட்டிருக்கும். அதன்கீழ் நிழற்படம் இருக்கும். கீழ் மத்தியில் உங்களது கையொப்பம் மீளவும் இடப்பட்டுள்ளதுடன் வலது கீழ்ப்பக்கத்தில் உள்ளிடும் இலக்கமும் (Card Access Number/CAN) இருக்கும்.

இலத்திரனியல் வதிவிட உரிமை அட்டையின் பின்பக்கத்தில் குறிப்பு–களுக்காக மேலதிக பக்கம் ஒன்று சேர்க்கப்பட்டிருக்கலாம். உங்களது தனிப்பட்ட விபரங்களான பிறந்த நகரம், கண்களின் நிறம், உயரம் மற்றும் வதிவிட முகவரி குறிப்பிடப்பட்டிருக்கும். இறுதியாக அட்டை வழங்கப்பட்ட திகதி மற்றும் வழங்கிய வெளிநாட்டவர் திணைக்களம் காணப்படும். அட்டையின் பின்பக்க கீழ்ப்பகுதியில் கருவிகளால் வாசிக்கக்கூடிய பகுதி இருக்கும், இதில் உங்களது தனிப்பட்ட தரவு–கள் எதுவும் அடங்கியிருக்காது.

இலத்திரனியல் வதிவிட உரிமை அட்டையில் இலத்திரனியல் தகவல் பதிவு சிப் (Chip) ஒன்று காணப்படும். இலத்திரனியல் அட்டைகளை வாசிக்கும் கருவியின் உதவியால் அல்லது அதுபோ–ன்ற தேஉஊ –செயற்பாட்டை வாசிக்கும் ஸ்மாற் தொலைபேசியால் அல்லது ரப்லெட்டால் (NCF Near Field Communication) நீங்கள் இணையவழி ஊடாக–வியாபாரநிலையங்களுக்கு மற்றும் இணையத்–தளத்தில் செயலாற்றுவதற்கு மற்றும் தானியங்கும் இயந்திரங்களில் அத்தாட்சிப்படுத்துவதற்குப் பாவிக்கலாம்.

வலதுபக்க மேல்பகுதியில் காணப்படும் அடையாளங்களில் நீங்கள் இணைய வழியாக–செயற்படுத்தக்கூடிய அனைத்து இணையப் பாவ–ிப்புகள், தானியங்கும் இயந்திரங்கள் மற்றும் அட்டையை வாசிக்கும் கருவிகள் குறித்து காண்பிக்கப்பட்டுள்ளது.

# உங்கள்
# ஆன்லைன் அடையாளச் செயல்பாடு

## டிஜிட்டல் உலகத்துக்கான உங்கள் வசிப்பிட அனுமதி

உங்கள் மின்னணு வசிப்பிட அனுமதியை, ஆன்லைன் அடையாளச் செயல்பாட்டுக்குப் பயன்படுத்த முடியும் மற்றும் இணையம் மற்றும் ஆட்டோமேட்களில் பாதுகாப்பான வகையில் உங்கள் அடையாளத்தை நிரூபித்திட முடியும். அரசாங்க மற்றும் வர்த்தக விவகாரங்களை எளிதாகவும், மின்னணு ரீதியாகவும் உங்களால் கையாள முடியும். இது உங்கள் நேரம், பணம் மற்றும் பயணங்களை மிச்சப்படுத்தும்.

பின்வருமாறு டிஜிட்டல் உலகத்தில் உங்கள் தரவு எப்போதுமே பாதுகாக்கப்படுகிறது:

- உங்கள் தனிப்பட்ட தகவலைப் பரிமாற்றுவதற்கு முன்பு, அவற்றை யார் பெறுவார் என்பதையும், ஆன்லைன் அடையாளச் செயல்பாட்டைப் பயன்படுத்துவதற்கு அவருக்கு அதிகாரம் உள்ளதா என்பதையும் நீங்கள் பார்க்க முடியும்.

- எனவே, உங்கள் தனிப்பட்ட தரவை மின்னணு ரீதியாகப் பரிமாற்றுவதற்கு, நீங்கள் உங்கள் தனிப்பட்ட ரகசிய எண்ணை (PIN) உள்ளிட வேண்டும்.

- பரிமாற்றப்படும் போது உங்கள் தனிப்பட்ட தரவு முழுமையாக மறைகுறியாக்கப்பட்டிருக்கும் மற்றும் அதனை இடைமறிக்கவோ அல்லது பார்க்கவோ முடியாது.

எனவே, ஆன்லைன் அடையாளச் செயல்பாடு கொண்டு, மறைகுறியாக்கப்பட்ட உங்கள் தனிப்பட்ட தகவலை எப்போது பரிமாற்ற வேண்டும் மற்றும் யாருக்குப் பரிமாற்ற வேண்டும் என்பதை உங்களால் தீர்மானிக்க முடியும்.

### ஆன்லைன் அடையாளச் செயல்பாடு கிடையாது

ஒரு நபரின் அறிக்கைகளின் அடிப்படையில் தனிப்பட்ட தரவு இருப்பதாக மின்னணு வசிப்பிட அனுமதியில் குறிப்பிடப்பட்டிருந்தால் அடையாளச் செயல்பாட்டை மேற்கொள்ள முடியாது.

16 வயதுக்கு மேற்பட்டவர்கள் மட்டுமே ஆன்லைன் அடையாளச் செயல்பாட்டைப் பயன்படுத்த முடியும்.

## ஆன்லைன் அடையாளத்துக்கு உங்களுக்குத் தேவையானது என்ன

உங்கள் ஆன்லைன் அடையாளச் செயல்பாட்டைப் பயன்படுத்த உங்களுக்குத் தேவையானவை:




www.ausweisapp.bund.de

## ஆன்லைன் அடையாளம் எளிதானது

ஆன்லைன் அடையாளச் செயல்பாட்டின் லோகோ உள்ள இடங்களில்,
நீங்கள் உங்கள் டிஜிட்டல் அடையாளத்தைச் செய்ய முடியும்.

1

விருப்பமான ஆன்லைன் சேவைகளை அழைத்து
அடையாளச் செயல்முறையை தொடங்குகிறீர்கள்.

www.

2

இப்போது, யார் உங்கள் தரவைப் பெறுவார் மற்றும்
உங்கள் பெறுநர் என்ன அறிய விரும்புகிறார் என்பதை
நீங்கள் பார்க்கலாம்

3

உங்கள் மின்னணு வசிப்பிட அனுமதியை கார்டு ரீடர்
அல்லது பொருத்தமான கேஷுஉ செயலாக்கப்பட்ட ஸ்மார்ட்ஃ
போன் அல்லது டேப்லெட்டுடன இணைக்கிறீர்கள்.

4

உங்கள் தனிப்பட்ட ரகசிய எண்ணை (PIN) உள்ளிடுவதன்
மூலம் தரவு சேகரிப்பை நீங்கள் ஏற்கிறீர்கள்.

******

5

உங்கள் தனிப்பட்ட தரவை சேகரிப்பதற்கு சேவை
வழங்குநருக்கு அதிகாரம் உள்ளதா என்று சிப் சரிபார்த்திடும்.
அதன் பின்பே, முழுமையான மறைகுறியாக்கத்துடன்
தரவானது பாதுகாப்பாகப் பரிமாற்றப்படும்.

# உங்கள் தரவின் செயல்மிகு பாதுகாப்பு

நான்கு பாதுகாப்பு வழிமுறைகள் உங்கள் தனிப்பட்ட தரவைப் பாதுகாக்கின்றன.

## 1

### உடைமை மற்றும் அறிவின் ஒருங்கிணைப்பு

மின்னணு வசிப்பிட அனுமதியை நீங்கள் வைத்திருந்து, உங்கள் தனிப்பட்ட ரகசிய எண்ணை (PIN) நீங்கள் அறிந்திருந்தால் மட்டுமே, உங்களால் ஆன்லைன் அடையாளச் செயல்பாட்டைப் பயன்படுத்த முடியும்.

இது இரு படிமுறை அங்கீகரிப்பு என்று அழைக்கப்படுகிறது மேலும் பரவலாக உள்ள பயனர் பெயர் மற்றும் கடவுச்சொல்லைப் பயன்படுத்தும் ஒரு படிமுறை அங்கீகரிப்பை விட இது மிகவும் பாதுகாப்பானது.

## 2

### பரஸ்பர அடையாளம்

ஆன்லைன் அடையாளச் செயல்பாட்டின் மூலம், எப்போதுமே இரு தரப்பினர்களும் தங்களை அடையாளம் கண்டு கொள்ளலாம். எனவே, உங்கள் தரவு யாருக்குப் பரிமாற்றப்படுகிறது என்பதை உங்களால் எப்போதுமே பார்க்க முடியும். தரவைச் சேகரிப்பதற்கு இணையத்தில் உங்கள் எதிரில் இருப்பவர், செல்லுபடியாகக் கூடிய மாநிலச் சான்றிதழை வைத்திருக்க வேண்டும். அதனைக் காண்பிக்குமாறு நீங்கள் அவரிடம் கேட்கலாம். சேகரிப்புக்கு நீங்கள் ஒப்புக்கொண்டால், உங்கள் PIN ஐ உள்ளிடுவதன் மூலம் பரிமாற்றத்துக்கான ஒப்புதலை நீங்கள் வழங்கலாம்.

பரஸ்பர அடையாளச் சான்று, டிஜிட்டல் உலகத்தில் உங்கள் பாதுகாப்பை மேம்படுத்திடும்.

## 3

### தரவுப் பரிமாற்றத்துக்கான முன்தேவைகள்

கார்டு ரீடர் அல்லது பொருத்தமான NFC செயலாக்கப்பட்ட ஸ்மார்ட்ஃபோன் அல்லது டேப்லெட்டுடன், மின்னணு வசிப்பிட அனுமதி இணைக்கப்பட்டு உங்கள் PIN ஐ உள்ளிட்டால் மட்டுமே, தரவானது பரிமாற்றப்படும்.

எனவே, உங்களுக்குத் தெரியாமல் தரவைப் பிரித்தெடுக்க முடியாது. உங்கள் மின்னணு வசிப்பிட அனுமதி திருடப்பட்டால் அல்லது தொலைந்து போனால் கூட, உங்கள் தரவு பாதுகாக்கப்படும்.

## 4

### முழுமையான மறைகுறியாக்கம்

மறைகுறியாக்கப்பட்ட நிலையில் மட்டுமே தரவு பரிமாற்றப்படும்.

இந்த முழுமையான மறைகுறியாக்கம் காரணமாக, திருட்டு மற்றும் மோசடிக்கு எதிராக உங்கள் தரவு பாதுகாக்கப்படும்.

## ஆன்லைன் அடையாளச் செயல்பாட்டை நீங்கள் எங்கு பயன்படுத்த முடியும்

பின்வரும் ஆணையங்களில் இருந்து கிடைக்கப்பெறும் பல்வேறு சேவைகளுக்கு நீங்கள் ஆன்லைன் அடையாளச் செயல்பாட்டைப் பயன்படுத்த முடியும்:

- ஆன்லைனில் பதிவுசெய்தல்
  முதன்முறையாக நீங்கள் ஒரு ஆன்லைன் சேவைக்காகப் பதிவு செய்யும் போது, பெரும்பாலும் பல்வேறு பயனர் விவரங்கள் சேகரிக்கப்படும். உங்கள் பெயராக இருக்கலாம், சிலசமயம் உங்களின் முழு முகவரியும் கேட்கப்படலாம். மின்னணு வசிப்பிட அனுமதியின் உதவியுடன், இந்தத் தரவுகளை நீங்கள் வேகமாகவும், தவறின்றியும் பரிமாற்றிட முடியும்.

- வயது மற்றும் முகவரியின் சரிபார்ப்பு
  சில சேவைகளை ஒரு குறிப்பிட்ட வயதுக்கு மேற்பட்டவர்கள் மட்டுமே பயன்படுத்த முடியும் அல்லது குறிப்பிட்ட முகவரியில் வசிப்பதாக பதிவு செய்தால் மட்டுமே பயன்படுத்த முடியும். மின்னணு வசிப்பிட அனுமதி கொண்டு வேறு தகவல்கள் எதையும் வெளிப்படுத்தாமல், உங்கள் வயது மற்றும் முகவரியை உங்களால் சரிபார்த்திட முடியும். வெறும் “ஆம்” அல்லது “இல்லை” என்பது மட்டுமே பரிமாற்றப்படும்.

- தானியங்கு படிவ நிரப்பல்
  ஆன்லைன் படிவங்களை நிரப்புவது என்பது கடினமான காரியம். பெயர் அல்லது முகவரியை உள்ளிடும்போது, தட்டச்சுப் பிழை ஏற்பட வாய்ப்புள்ளது. ஆன்லைன் அடையாளச் செயல்பாட்டில் இருந்து இந்தத் தகவல்களை எடுத்துக் கொள்ளச் செய்யமுடியும்.

- ஆட்டோமேட்களில் அடையாளம்
  எதிர்காலத்தில், தகவல் மற்றும் வெண்டிங் இயந்திரங்களில் பல்வேறு தனிப்பட்ட சேவைகள் வழங்கப்படும். இதிலும், நீங்கள் உங்கள் மின்னணு அடையாள அனுமதியைப் பயன்படுத்தி வேகமாகவும், எளிதாகவும் உங்கள் அடையாளத்தை நிரூபிக்கலாம்.

- புனைப்பெயர் மூலம் அணுகுதல்
  புனைப்பெயர் என்பது மின்னணு வசிப்பிட அனுமதியின் சிப் மூலம் உருவாக்கப்படும் ஒரு அடையாளங்காட்டி – இது தொடர்புடைய சேவை வழங்குநரைச் சார்ந்து இருக்கும். உதாரணத்திற்கு, உங்கள் தனிப்பட்ட தரவை வெளிப்படுத்தாமல், சமூக வலைத்தளங்களில் நீங்கள் உங்களை அடையாளப்படுத்த முடியும். தொடக்கத்தில் பதிவு செய்த பின்னர், நீங்கள் ஒவ்வொரு முறை சேவைகளை அணுகும் போதும், உங்கள் தனிப்பட்ட தரவு பரிமாற்றப்படாமல் நீங்கள் அடையாளம் காணப்படுவீர்கள்.

- அரசாங்க ஆணையங்கள் பயன்படுத்தும் படிவங்கள்
  எதிர்காலத்தில் பல்வேறு ஆணையங்கள் இணையத்தில் தங்களின் சேவைகளை வழங்கவிருக்கின்றன (உதாரணத்திற்கு, ஃபெடரல் ப்யூரோவின் மோட்டார் வாகனங்கள் மற்றும் ஓட்டுனர்களின் புள்ளிகளின் எண்ணிக்கை குறித்த விசாரணைகள்). இந்த வழங்கல்களுக்கான நம்பகமான அடையாளச் சான்றை ஆன்லைன் அடையாளச் செயல்பாடு வழங்குகிறது.

**கூடுதல் தகவல்**

இந்த அடையாள அட்டை போர்ட்டலில் இது குறித்த கூடுதல் தகவலை நீங்கள் பார்க்கலாம்
**www.personalausweisportal.de**

## உங்கள் சிறந்த உரிமை – சுய நிர்ணயத் தரவு வெளிப்பாடு

இறுதியில், என்ன தரவைப் பரிமாற்ற வேண்டும் என்பதை நீங்களே தீர்மானிக்கிறீர்கள்.

உங்கள் மின்னணு வசிப்பிட அனுமதியின் முன்தேவை அது செல்லுபடியாக வேண்டும்.

ஒவ்வொரு தரவுப் பரிமாற்றத்தின் போதும் உங்கள் தரவு மறைகுறியாக்கப்பட்டிருக்கும். சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் நிறுவப்பட்ட மறைகுறியாக்க வழிமுறைகளின் மூலம் அனைத்துத் தகவல்களும், பரிமாற்றங்களும் பாதுகாக்கப்படுகின்றன.

ஆன்லைன் வழங்குநர், உண்மையாக நோக்கத்துக்கு ஏற்ப இருக்கிறாரா என்பதை ஆன்லைன் அடையாளச் செயல்பாடு சரிபார்க்கும்.

மின்னணு வசிப்பிட அனுமதியை அதன் சேவைகளுக்காகப் பயன்படுத்த விரும்பும் வழங்குநர்கள், சம்பந்தப்பட்ட மாநிலத்தின் அங்கீகாரச் சான்றிதழுக்காக (Vergabestelle für Berechtigungszertifikate – VfB) டெர்மினல் சான்றிதழ்களைப் பெற வழங்கல் துறையிடம் விண்ணப்பிக்க வேண்டும். கடுமையான நிபந்தனைக்கு உட்பட்டு, என்னென்ன தரவை சேவைக்கு வழங்க வேண்டும் என்பதை சரிபார்த்து அந்தத் தரவுக்கு மட்டுமே வழங்கல் துறையானது அங்கீகாரத்தை வழங்கிடும்.

உங்கள் PIN எண்ணை உள்ளிடுவதன் மூலம், நீங்கள் பின்வரும் தரவை வெளிப்படுத்த முடியும்:



## உடனடிப் பிரித்தெடுப்பு

பெயர் மற்றும் முகவரி போன்ற தனிப்பட்ட தரவு படிவத்தில் உள்ளிடப்பட வேண்டியிருக்கும் போது, உடனடிப் பிரித்தெடுப்பு உகந்ததாக இருக்கும். பொருத்தமான கார்டு ரீடரின் மீது உங்கள் மின்னணு வசிப்பிட அட்டையை வைப்பதன் மூலம், தரவை மின்னணு ரீதியாக அனுகவும், செயல்படுத்தவும் செய்திட முடியும். இது ஒரு விரைவான செயல்முறை மற்றும் பிழைகளைத் தவிர்த்திடும்.

இந்தச் செயல்பாட்டை வழங்கும் ஆணையங்களுக்கும், நிறுவனங்களுக்கும் உடனடிப் பிரித்தெடுப்புக்கான மாநில அங்கீகரிப்பும், பொருத்தமான கார்டு ரீடரும் தேவை.

உடனடிப் பிரித்தெடுப்பு பின்வருமாறு செயல்படுகிறது:

1. உங்கள் மின்னணு வசிப்பிட அனுமதி மற்றும் செல்லுபடியாகக் கூடிய பாஸ்போர்ட்டைகவுண்டரில், companyவழங்கவும் இதன் மூலம் அதிகாரி அல்லது நிறுவனத்திடம் உங்களை அடையாளப்படுத்திக் கொள்ளவும்.
2. கார்டு ரீடரின் மீது உங்கள் மின்னணு வசிப்பிட அட்டையை வைக்கிறீர்கள்.
3. உங்கள் தனிப்பட்ட தரவை உடனடியாகப் பிரித்தெடுப்பதற்கு, சேவை வழங்குநர் அங்கீகரிக்கப்பட்டுள்ளாரா என்பதை மின்னணு வசிப்பிட அனுமதியில் உள்ள சிப் சரிபார்த்திடும்.
4. அட்டை அணுகல் எண் (ஊயுே) உள்ளிடப்படுகிறது. இது மின்னணு வசிப்பிட அனுமதியின் காலாவதி தேதிக்கு வலதுபுறமாக அச்சிடப்பட்டிருக்கும்.
5. முழுமையான மறைகுறியாக்கத்துடன், பிழைகள் ஏதுமின்றி உங்கள் தரவு பாதுகாப்பாகப் பரிமாற்றப்படுகிறது.


### உங்கள் தரவின் பாதுகாப்பு

உங்களை அறியாமல் யாரும் சிப்பில் இருந்து தரவுகளைத் திருட சாத்தியமில்லை. இரகசிய எண் (PIN) அல்லது மின்னணு வசிப்பிட அனுமதியில் அச்சிடப்பட்டிருக்கும் அட்டை அணுகல் எண் (CAN) உள்ளிடப்பட்டால் மட்டுமே சிப்பானது தரவை வெளியிடும்.

அடையாளங்களைச் சரிபார்க்க சட்டப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளால் மட்டுமே உங்கள் மின்னணு வசிப்பிட அனுமதியில் உள்ள பயோமெட்ரிக் தரவுகளை மீட்டெடுக்க முடியும். ஆன்லைன் ஐடி செயல்முறைகளின் போதோ, உடனடிப் பிரித்தெடுப்பின் போதோ, புகைப்படம் மற்றும் விரல்ரேகைகளைப் பரிமாற்றிட முடியாது.

# பிற செயல்பாடுகள்

## பாதுகாப்பு அதிகாரிகளின் மூலம் தரவு மீட்டெடுப்பு



உங்கள் மின்னணு வசிப்பிட அனுமதியின் சிப்பில், உங்களின் பயோமெட்ரிக் தரவு சேமிக்கப்பட்டிருக்கும். இது காவல்துறை, இமிகிரேஷன் அதிகாரிகள், சுங்கத்துறை மற்றும் எல்லைப் பாதுகாப்பு அதிகாரிகள் போன்றோர்களிடம் மின்னணு வசிப்பிட அனுமதியை வழங்கும் பட்சத்தில் சட்ட நோக்கங்களுக்காக மட்டுமே பரிமாற்றப்படும். அவர்கள் சிப்பில் சேமிக்கப்பட்டுள்ள புகைப்படத்தை–தயும், விரல்ரேகைகளையும் அடையாளம் காட்டும் நபருடனும் மற்றும் அவரிடம் உள்ள பயண ஆவணங்களுடனும் ஒப்பிட்டுப் பார்ப்பர். திருடப்பட்ட அல்லது தொலைந்த வசிப்பிட அனுமதி கொண்டு மோசடி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டால் அதனை விரைவில் கண்டறியமுடியும். இணையம் மூலம் பயோமெட்ரிக் தரவுகளை மீட்டெடுக்க முடியாது.



- பயோமெட்ரிக் புகைப்படம்
  பயோமெட்ரிக் புகைப்படத்தில், உங்கள் முகம் மையத்தில் இருக்க வேண்டும் மற்றும் முன்னால் இருந்து பார்க்கும் போது தெளிவாகத் தெரியவேண்டும். முகத்தை மறைக்கும் வகையில் முகமூடிகளை அணியக் கூடாது மற்றும் உங்கள் முகம் தெளிவாகத் தெரியவேண்டும். விதிவிலக்குகள் உண்டு உதாரணத்திற்கு, மருத்துவக் காரணங்களுக்காக. புகைப்படமானது அட்டையின் மேல் அச்சிடப்பட்டு, சிப்பின் உள்ளே மின்னணு ரீதியாக சேமிக்கப்படும்.

- விரல்ரேகைகள்
  இமிகிரேஷன் அலுவலகத்தில் மின்னணு வசிப்பிட அனுமதிக்காக நீங்கள் விண்ணப்பிக்கும் போது, உங்கள் ஆட்காட்டி விரல்களின் ரேகைப்பதிவுகள் எடுக்கப்படும். இவை அட்டையின் சிப்பில் சேமிக்கப்படும். இமிகிரேஷன் அலுவலகத்தில் விரல்ரேகைகள் தற்காலிகமாக மட்டுமே சேமிக்கப்படும் மற்றும் மின்னணு வசிப்பிட அனுமதி வழங்கப்பட்ட பின்னர் அச்சுப்பிரதிகள், டீரனெநளனசரஉமநசநடை புஅடிர் மற்றும் ஆகியவை மின்னணு வசிப்பிட அனுமதி வழங்கப்பட்ட பின்னர் அழிக்கப்பட்டுவிடும். ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளிடம் விரல்ரேகைகள் எடுக்கப்படாது.


- துணை விதிமுறைகள்
  வசிப்பிட அனுமதி தொடர்பான துணை விதிமுறைகள் மற்றும் பிற விதிகளும் மின்னணு வசிப்பிட அனுமதியின் சிப்பில் சேமிக்கப்பட்டு, கூடுதலாக ஒரு தாளில் அச்சிட்டுக் கொடுக்கப்படும். மின்னணு வசிப்பிட அனுமதியுடன் சேர்த்து இந்தத் தாளும் உங்களிடம் வழங்கப்படும். சில சமயங்களில், ஓர் ஒட்டும் லேபிள் கொண்டு இந்தத் துணை விதிமுறைகள் உங்கள் பயண ஆவணங்களுடன் இணைக்கப்படும்.

# உங்கள் PIN கடிதம்

## உங்களுக்கான முக்கியத் தகவல்

மின்னணு வசிப்பிட அனுமதி வழங்கப்பட்ட பின்னர், உங்கள் மின்னணு வசிப்பிட அனுமதி குறித்த தகவலுடன் கூடிய PIN கடிதத்தையும் ஆன்லைன் அடையாளச் செயல்பாட்டையும் பெறுவீர்கள்.

PIN கடிதத்தில் உங்களுக்குத் தேவையான இந்த முக்கியத் தகவல்கள் இருக்கும்:




**எனவே, உங்கள் PIN கடிதத்தைப் பாதுகாப்பான இடத்தில் வைத்திடுங்கள். இந்தத் தகவல் உங்களுக்கு மட்டுமேயானது.**

விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் போது, நீங்கள் 16 வயதுக்கு மேற்பட்டவராக இருந்தால் மட்டுமே PIN கடிதம் உங்களு–க்கு அனுப்பப்படும் அதற்குக் குறைவான வயதினராக நீங்கள் இருந்தால், உங்களால் ஆன்லைன் அடையாளச் செயல்பாட்டைப் பயன்படுத்த முடியாது மற்றும் இதனால் PIN கடிதத்தைப் பெற மாட்டீர்கள். 16 வயதுக்குப் பின்னர் உங்கள் இமிகிரேஷன் அலுவலகத்தில் ஆன்லைன் அடையாளச் செயல்பாட்டை நீங்கள் செயல்படுத்திட முடியும். உங்கள் ஆறு இலக்க PIN ஐ நீங்கள் அமைத்துக் கொள்ளலாம் மற்றும் ரத்து செய்தல் கடவுச்சொல்லின் அறிவிப்பு உங்களுக்கு அனுப்பப்படும்.

- உங்கள் தனிப்பட்ட ஆறு இலக்க PIN (தனிப்பட்ட அடையாள எண்)
  உங்கள் ஆறு இலக்க PIN ஐ எதற்கு எப்போது பயன்படுத்த வேண்டும் என்பதை நீங்கள்தான் தீர்மானிக்க வேண்டும். மின்னணு வசிப்பிட அனுமதியைப் பெற்ற பின்பு உங்களால், கடிதத்தில் கொடுக்கப்பட்ட ஆறு இலக்க PIN க்கு பதிலாக ஐந்து இலக்க செயலாக்க PIN ஐ (டிரான்ஸ்போர்ட் PIN எனவும் அழைக்கப்படுகிறது) அமைத்துக் கொள்ள முடியும். நீங்கள் இதனை உங்கள் வீட்டில் உள்ள எதனிப்பட்ட கணினியைக் கொண்டோ அல்லது கார்டு ரீடரின் உதவியுடனோ அல்லது பொருத்தமான NFC செயலாக்கப்பட்ட ஸ்மார்ட்ஃபோன் அல்லது டேப்லட் கொண்டோ செய்யமுடியும் அல்லது உதவிக்காக நீங்கள் இமிகிரேஷன் அலுவலகத்துக்கும் செல்லலாம். அதன்பின்னரே, ஆன்லைன் ஐடி செயல்பாடு உங்களுக்குத் தனிப்பட்ட முறையில் கிடைக்கும். ஆன்லைன் அடையாளச் செயல்பாட்டை நீங்கள் பயன்படுத்த விரும்பும் போதெல்லாம், உங்களின் தனிப்பட்ட ஆறு இலக்க PIN தேவைப்படும்.

- அட்டை அணுகல் எண்/CAN
  நீங்கள் தவறுதலாக இரண்டு முறை ஆறு இலக்க PIN ஐ உள்ளிட்டு விட்டால், அடுத்ததாக ஆறு இலக்க PIN மட்டுமல்லாது, அட்டை அணுகல் எண்ணையும் (CAN) நீங்கள் உள்ளிட வேண்டும். இதனை நீங்கள் உங்கள் மின்னணு வசிப்பிட அட்டையின் முன்புறம், கீழே வலது ஓரத்தில் காணலாம். உடனடிப் பிரித்தெடுப்புக்கும் இந்த அணுகல் எண் தேவை.

- PUK (தனிப்பட்ட தடுப்புநீக்க விசை)
  மூன்று முறை நீங்கள் தவறான PIN ஐ உள்ளிட்டால், ஆன்லைன் அடையாளச் செயல்பாடு தடுக்கப்படும். அதனை மீண்டும் செயல்படுத்த நீங்கள் PUK ஐ உள்ளிடவேண்டும். உங்கள் PIN கடிதத்தில் PUK குறிப்பிடப்பட்டிருக்கும்.

- ரத்து செய்தல் கடவுச்சொல்
  நீங்கள் உங்கள் மின்னணு வசிப்பிட அனுமதியைத் தொலைத்து விட்டாலோ அல்லது அது திருடப்பட்டாலோ, உடனடியாக இமிகிரேஷன் அலுவலகம் மூலம் அல்லது ரத்து உதவியின் மூலம் ஆன்லைன் அடையாளச் செயல்பாட்டை ரத்து செய்ய வேண்டும். இதனைச் செய்ய, உங்கள் PIN கடிதத்தில் காணப்படும் ரத்து கடவுச்சொல்லை ஊழியரிடம் தெரிவித்திடுங்கள்.

# பாதுகாப்பு ஆலோசனை

## பாதுகாப்பை நோக்கிய உங்கள் பங்களிப்பு



இந்தப் பாதுகாப்பு ஆலோசனையைக் கவனிக்கவும்:

- உங்கள் மின்னணு வசிப்பிட அனுமதியை எப்போதுமே ஒரு பாதுகாப்பான இடத்தில் வைக்கவும்.
- உங்கள் ஆறு இலக்க ரகசிய எண்ணை (PIN) நீங்கள் மட்டுமே அறிவீர்கள். எளிதில் ஊகிக்கக்கூடிய எண்ணைப் பயன்படுத்த வேண்டாம், உதாரணத்திற்கு 123456, அல்லது உங்கள் பிறந்த தேதி அல்லது உங்கள் மின்னணு வசிப்பிட அனுமதியில் காணப்படும் எண்கள்.
- மூன்றாம் தரப்பினர்களுக்கு உங்கள் PIN ஐ கூறக்கூடாது. PIN மற்றும் வசிப்பிட அனுமதியை ஒன்றாக ஒரே இடத்தில் வைக்க வேண்டாம் மற்றும் மின்னணு வசிப்பிட அனுமதியின் மீது PIN ஐ எழுதவேண்டாம்.
- PIN கடிதத்தைப் பாதுகாப்பான இடத்தில் வைக்கவும். இந்த PIN கடிதத்தில் முக்கியமான தகவல்கள் இருக்கும்.
- தரவு வாசிக்கப்பட்ட பின்னர், கார்டு ரீடர் அல்லது பொருத்தமான செயலாக்கப்பட்ட ஸ்மார்ட்ஃபோன் அல்லது டேப்லெட்டில் இருந்து அட்டையை அகற்றிவிடவும்.
- உங்கள் இயங்குதளம், ஆன்டிவைரஸ் மற்றும் ஃபயர்வால் மென் பொருட்களை வழக்கமான முறையில் மேம்படுத்தவும்.
- உங்கள் மின்னணு வசிப்பிட அனுமதி தொலைந்துவிட்டாலோ அல்லது திருடப்பட்டுவிட்டாலோ, உடனடியாக இமிகிரேஷன் அலுவலகத்தில் அதுகுறித்து தெரிவித்து ஆன்லைன் அடையாளச் செயல்பாட்டை ரத்து செய்யவும். ரத்து செய்வதன் மூலம், மோசடிப் பயன்பாட்டு முயற்சி உடனடியாகக் கண்டறியப்படும்.



# ரத்து உதவி

## நாள் முழுவதுமான அணுகல்



# 116 116

ரத்து உதவிக்கான குறிப்புகள்

ரத்து உதவிக்கான தொலைபேசி எண்ணை வாரத்தின் ஏழு நாட்களும் நாள் முழுவதிலும் **116 116** என்ற எண்ணில் தொடர்புகொள்ள முடியும் வெளிநாட்டில் இருந்து அழைக்கும் போது, **0049–116 116** அல்லது **0049–3040 50 40 50** என்ற எண்ணை அழைக்கவும் (கட்டணங்களுக்கு உட்பட்டது).

உதவியை அழைக்கும் போது PIN கடிதத்தில் உங்களுக்கு அனுப்பப்பட்ட ரத்து கடவுச்சொல்லைத் தயாராக வைத்திருங்கள்.

ரத்து செய்த பின்னர் ஆன்லைன் அடையாளம் மற்றும் உடனடிப் பிரித்தெடுப்பு ஆகியவற்றை மேற்கொள்ள முடியாது.

இமிகிரேஷன் அலுவலகத்தில் உங்களால் மின்னணு வசிப்பிட அனுமதியின் தடுப்பை நீக்கிக்கொள்ள முடியும்

மின்னணு வசிப்பிட அட்டை தொலைந்து போகும் பட்சத்தில், உள்ளூர் இமிகிரேஷன்அலுவலக அதிகாரிக்கு உடனடியாகத் உடனடியாகத் தகவல் தெரிவிக்க வேண்டும்.



# இணையத்தில்

பின்வருபவை ஆன்லைன் அடையாளச் செயல்பாடு கொண்ட மின்னணு அடையாள அட்டை தொடர்பான முக்கியமான இணையதளங்கள்

**www.ausweisapp.bund.de**
இலவச AusweisApp2 பதிவிறக்கம் மற்றும் தொலைபேசி மற்றும் மின்னஞ்சல் உதவி

**www.bsi-fuer-buerger.de**
இணையத்தில் உங்கள் பாதுகாப்பு குறித்த உதவிகரத் தகவல்கள்

## பொருள் விளக்கம்

**CAN:** Card Access Number; அட்டை அணுகல் எண்

**eAT:** மின்னணு வசிப்பிட அட்டை (elektronischer Aufenthaltstitel)

**EU:** ஐரோப்பிய ஒன்றியம்

**ICT:** Intra Corporate Transfer – அகப் பெருநிறுவனப் பரி–மாற்றம்

**NFC:** Near Field Communication; அருகாமைத் தகவல்தொடர்ப்பு ஒரு சில சென்டிமீட்டர் தொலைவில் உள்ள வயர்லெஸ் தரவு பரிமாற்றத்திற்கான ரேடியோ தரநிலை.

**PIN:** Personal Identification Number; தனிப்பட்ட அடையாள எண் தனிப்பட்ட ரகசிய எண்

**PUK:** Personal Unblocking Key; தனிப்பட்ட தடுப்புநீக்க விசை 8–இலக்க தடுப்புநீக்க எண்

**VfB:** அங்கீகார சான்றிதழ் விநியோகிப்பதற்கான பிரிவு (Vergabestelle für Berechtigungszertifikat)

# பதிப்பு விபரம்

வெளியிடுபவர்:
Bundesamt für Migration und Flüchtlinge
90461 Nürnberg

காலம்:
04/2020; 2. புதுப்பிக்கப்பட்ட பதிப்பு

தயாரிப்பு:
KonzeptQuartier® GmbH, 90762 Fürth
தற்போதைய நிலைக்குப் புதுப்பித்தல்: MediaCompany – Agentur für Kommunikation GmbH

படங்களுக்கான ஆதாரம்:
iStock/andresr, Giulio Fornasar, Geber86, pixdeluxe, Weekend Images Inc.
Bundesministerium des Innern, für Bau und Heimat

ஐகான்கள்:
KonzeptQuartier® GmbH, 90762 Fürth
Fink & Fuchs AG, 65205 Wiesbaden

இணையம்:
www.bamf.de/eAT

கேட்டுப் பெறக்கூடிய வசதி:
நீங்கள் இந்தப் பிரசுரத்தை எவ்வித தடைகளுமின்றி PDF–ஆவணமாகவும் தரவிறக்கிக் கொள்ளலாம்.
www.bamf.de/publikationen

இப் பிரசுரம் குடிவரவாளர்கள் மற்றும் அகதிகளுக்கான மத்திய திணைக்களத்தால் அதன் பொதுச்சேவையின் பிரகாரம் வெளியிடப்பட்டது. இந்தப் பிரசுரம் இலவசமாக வழங்கப்படுவதுடன் விற்பனைக்காக அல்ல என்பது குறிப்பிடத்தக்கது. [இதை எந்த அரசியல் பிரச்சாரக் கட்சிகளோ அல்லது தேர்தல் உதவியாளர்களோ, தேர்தல் பிரச்சாரத்தின்போது தேர்தல் விளம்பரமாகப் பாவிக்கக் கூடாது. இது மத்திய நாடாளுமன்ற–, மாநில– மற்றும் நகரத் தேர்தல்களுக்கும் அதேபோன்று ரோப்பிய நாடாளுமன்றத் தேர்தலுக்கும் செல்லபடியாகும்.]

Other Language 👤?
www.bamf.de/publikationen